## கள்ளக்குறிச்சி மாவட்ட வருவாய் அலுவலர் அவர்களின் செயல்முறைகள்
## முன்னிலை :- திரு. சி.விஜய்பாபு, எம்.டெக்.,

ந.க.அ4/7308/2021 நாள்: 10.05.2021

பொருள் : பணிவரன்முறை - தமிழ்நாடு அமைச்சுப்பணி - கருணை அடிப்படையில் பணி நியமனம் - கள்ளக்குறிச்சி மாவட்ட வருவாய் அலகு - 02.02.2016 முதல் 31.12.2019 வரை கருணை அடிப்படையில் பணி நியமனம் செய்யப்பட்ட - இளநிலை வருவாய் ஆய்வாளர்கள் மற்றும் தட்டச்சர்களுக்கு பணிவரன்முறை செய்து ஆணையிடுதல் - தொடர்பாக.

பார்வை : அரசாணை நிலை எண்.48 (தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (க்யூ.1) துறை), நாள்: 26.02.2021.

*****

**ஆணை :-**

பார்வையில் காணும் அரசாணையில் கருணை அடிப்படையில் 02.02.2016 முதல் 31.12.2019 வரை கருணை அடிப்படையில் பணியமர்த்தப்பட்டு, எவ்வித விதித்தளர்வு (Relaxation of Rules) மற்றும் அரசாணைகளுக்கு விலக்கு (Exemption of Government Orders) தேவைப்படாத அனைத்து பணியாளர்களின் பணி நியமனமும் நடைமுறையில் உள்ள விதிகளுக்குட்பட்டு வரன்முறைப்படுத்தப்படுகிறது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த ஆணையினை செயல்படுத்த, சம்பந்தப்பட்ட நியமன அலுவலர்களின் (Appointing Authority) ஒருநிலை கூடுதல் அதிகாரம் பெற்ற அலுவலர்கள் (One level higher than the appointing authority), அவரவர் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள கருணை அடிப்படையில் பணியமர்த்தப்பட்ட அரசு பணியாளரின் பணியினை வரன்முறை செய்திட, உரிய செயல்முறை ஆணை (Proceedings) வெளியிட்டு, தொடர்புடைய அரசுபணியாளரின் பணிப்பதிவேட்டில் பதிவு செய்யப்பட வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அதன்படி ஒருங்கிணைந்த விழுப்புரம் மாவட்டத்தில் கருணை அடிப்படையில் இளநிலை வருவாய் ஆய்வாளர்கள் மற்றும் தட்டச்சர்களாக பணிநியமனம் செய்யப்பட்டு, பின்னர் மாவட்ட பிரிவினையின் காரணமாக கள்ளக்குறிச்சி மாவட்ட வருவாய் அலகில் பணிபுரிந்துவரும் கீழ்க்கண்ட பட்டியலில் காணும் **3** இளநிலை வருவாய் ஆய்வாளர்கள் மற்றும் **2** தட்டச்சர்களுக்கு பணியில் சேர்ந்த நாளினை கணக்கிட்டு அவரவர்க்கு எதிரே உள்ள கலம் 5-ல் குறிப்பிட்டுள்ள நாளின்படி இளநிலை வருவாய் ஆய்வாளர் மற்றும் தட்டச்சர் நிலையில் பணிவரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

Scanned with CamScanner

| வ. எண். | பெயர் (திருவாளர்கள்) | தற்போது பணிபுரியும் அலுவலகம் | பணியில் சேர்ந்த நாள் | பணிவரன்முறை செய்யப்பட்ட நாள் |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| **இளநிலை வருவாய் ஆய்வாளர்கள் :** | | | | |
| 1 | ச. ஆனந்த் | இளநிலை வருவாய் ஆய்வாளர், வட்டாட்சியர் அலுவலகம், திருக்கோவிலூர். | 28.09.2016 முற்பகல் | 28.09.2016 முற்பகல் |
| 2 | க. சரவணன் | இளநிலை வருவாய் ஆய்வாளர், வட்டாட்சியர் அலுவலகம், உளுந்தூர்பேட்டை. | 01.10.2018 முற்பகல் | 01.10.2018 முற்பகல் |
| 3 | ரா. சதீஷ்குமார் | இளநிலை வருவாய் ஆய்வாளர், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், கள்ளக்குறிச்சி. | 01.07.2019 முற்பகல் | 01.07.2019 முற்பகல் |
| **தட்டச்சர்கள் :** | | | | |
| 4 | ரா. ரகு | தட்டச்சர், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், கள்ளக்குறிச்சி. | 04.07.2019 முற்பகல் | 04.07.2019 முற்பகல் |
| 5 | ஸ்ரீ.பாண்டியன், | தட்டச்சர், வட்டாட்சியர் அலுவலகம், சின்னசேலம். | 04.07.2019 முற்பகல் | 04.07.2019 முற்பகல் |

இது தொடர்பாக மேற்காணும் இளநிலை வருவாய் ஆய்வாளர்கள் மற்றும் தட்டச்சர்களின் பணிப்பதிவேட்டில் உரிய பதிவுகள் மேற்கொள்ளப்பட வேண்டியது.

ஒம்/- சி.விஜய்பாபு,
மாவட்ட வருவாய் அலுவலர்,
கள்ளக்குறிச்சி.

//உ.ந.உ.ப//

அலுவலக மேலாளர் (பொது)

**பெறுநர் :-** சம்பந்தப்பட்ட நபர்கள்.

**நகல் :-** மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது), கள்ளக்குறிச்சி.

**நகல் :-** சார் ஆட்சியர், கள்ளக்குறிச்சி.

**நகல் :-** வருவாய் கோட்டாட்சியர், திருக்கோவிலூர்.

**நகல் :-** வருவாய் வட்டாட்சியர், கள்ளக்குறிச்சி/திருக்கோவிலூர்/உளுந்தூர்பேட்டை/ சின்னசேலம்.

28/5/2021

Scanned with CamScanner